செய்தி வெளியீடு எண்: 314 நாள்: 04.06.2019

## செய்தி வெளியீடு

## ''பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை மேலும் மேம்படுத்திட அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிட வேண்டும்''

## அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வேண்டுகோள்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம், தலைமைச் செயலகத்தில், இன்று (04.06.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., மற்றும் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிதி மேம்பாட்டு நிறுவனம், சாலைப் போக்குவரத்து நிறுவனம் (தரமணி) உள்ளிட்ட நிறுவனங்களின் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள், நிதி நிலையினை மேம்படுத்துதல், பணியாளர்களின் பதவி உயர்வு மற்றும் ஓய்வூதிய பலன்களை விரைந்து வழங்குதல், பணிமனைகளை பழுது நிவர்த்தி செய்தல், போக்குவரத்து மானியக் கோரிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகளின் தற்போதைய நிலை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள புதிய பேருந்துகளின் இயக்கம் மற்றும் வசூல் நிலவரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, கிராமப்புற மக்களின் போக்குவரத்துத் தேவைகளை ஈடு செய்கின்ற வகையில் கூடுதல் பேருந்துகளை இயக்குதல், சுற்றுச்சூழல் மாசுப்படுவதை குறைக்கின்ற வகையில், சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய பெருநகரங்களில் மின்சாரப் பேருந்துகளை இயக்குதல் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து விரிவாக கலந்தாலோச்சிக்கப்பட்டன.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், “மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து, ஏழை, எளிய, அடித்தள மக்களின் முன்னேற்றத்தினையே தன் மூச்சாகக் கொண்டு, பல்வேறு நலத்திட்டங்களை தந்து, இன்றும் மக்களின் மனங்களில் நிறைந்துள்ள மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் காலம் போக்குவரத்துத் துறைக்கு பொற்காலம் என்றால் அது மிகையில்லை. அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பில், இரண்டு கட்டங்களாக ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் செலவில் 5,000 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, அவற்றில் ஏறத்தாழ 3,500 பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 1,500 பேருந்துகள் விரைவில் இயக்கப்படும்.

சுற்றுச் சூழல் நலனை போற்றி பாதுகாக்கின்ற வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக, மின்கலன் அல்லது மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகளை சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய பெருநகரங்களில் இயக்கிடும் பொருட்டு, C-40 (Clean Bus Declaration) என்கிற பன்னாட்டு அமைப்பின் மூலம் செயல்படுத்திட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து, ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் கடன் உதவியோடு, 12,000 புதிய BS-VI தரத்திலான பேருந்துகளையும், 2,000 மின்சாரப் பேருந்துகளையும் வாங்கிடும் திட்டம் நடப்பு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மின்சாரப் பேருந்துகளை சென்னையில் இயக்குவதற்கான முக்கிய வழித்தடங்கள், சார்ஜிங் பாயின்ட்ஸ் அமைத்தல் குறித்து விவரமான திட்ட அறிக்கை அந்நிறுவனத்தின் சார்பில் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விரைவில் அறிவிப்பார்கள்.

நம்முடைய 8 அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ, 1,20,000 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். குறிப்பாக, ஓட்டுநர்களுக்கு சீரிய முறையில் தரமான பயிற்சிகளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற சிறப்பு கூட்டங்களும், நலன்களை பாதுகாக்கின்ற வகையில், மருத்துவ முகாம்களும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் கழகங்களின் பணிகளை மேம்படுத்திடும் வகையில், அண்மையில் 14 பொது மேலாளர்களுக்கு மேலாண் இயக்குநர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கழகங்களின் கடுமையான நிதி நெருக்கடியிலும், இத்தகைய பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது, இதனை நீங்கள் அனைவரும் கருத்தில் கொண்டு, திறம்பட பணியாற்றி, பொதுமக்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையினை வழங்குவதிலும், பணியாளர்களின் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு, துறைக்கும், இந்த அரசுக்கும் பெருமை சேர்த்திட அர்ப்பணிப்புடன் பணியாற்றிட வேண்டும்.” என்று அமைச்சர் அவர்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**